**இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள், சென்னை -6 அவர்களின் செயல்முறைகள்**

**இடம் - மூன்றாம் தளம், வணிகவரிக் கட்டிடம் இணைப்பு, சென்னை-6**

**முன்னிலை - திரு. செ. ஞானக்குமார், எம்.எஸ்.சி.,**

ந.க.441/2016/ஆ1

நாள் 06.07.2018

பொருள் - பொதுப்பணிகள் - வணிகவரித் துறை - இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள் அலுவலகம், சென்னை -6 - திரு. க. ஆனந்தராஜா, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3, இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள் அலுவலகம், சென்னை -6 - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்- தொடர்பாக.

பார்வை - 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.6966/PSD-B3/2015, நாள் 13.07.2016.

2.இணை ஆணையர் (வவ) சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் கடித எண். Rc.5469/2016/A2, நாள் 22.08.2016.

----------

**ஆணை :**

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி-4 தேர்வின் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வணிகவரித்துறை சென்னை (தெற்கு) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் செயல்முறை ஆணையின் படி இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள், சென்னை அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -3 ஆக திரு. க. ஆனந்தராஜா என்பவர் 26.09.2016 மு.ப. முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியாளருக்கு பார்வை 1 மற்றும் 2ல் காணும் கடிதங்களின்படி திரு. க. ஆனந்தராஜா, தமிழ்நாடு அமைச்சு பணிகளில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பணிதரத்தில், 26.09.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. மேலும் தனியாளர் தமது தகுதிகாண் பருவத்தினை 26.09.2016 முதல் துவக்கப்பட்டதாக கருதி, தமது தகுதிகாண் பருவகாலத்தினை மூன்றாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றதலுக்குட்பட்ட காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடித்தல் வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. மேலும், தனியாளர் தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக

Scanned with OKEN Scanner

நடைமுறை தேர்வு (Tamil Nadu Government Office Manual Test) மற்றும் அலுவலக கணினி மேலாண்மை தேர்வு (Computer on Office Automation) ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறைமானது, நீதிமன்றத்தில் இவரின் நியமனம் தொடர்பாக ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருக்கும்பட்சத்தில் அதன் இறுதி தீர்ப்பின் அடிப்படையில் மாறுபடும்.

இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள் (பொறுப்பு),
சென்னை-6.

பெறுநர்
திரு. க. ஆனந்தராஜா,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3
இணை ஆணையர் (வவ) மேல்முறையீடுகள் அலுவலகம்,
சென்னை -6.

நகல் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது-

நகல்
1.இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம்,சென்னை-6.
2. இருப்பு கோப்பு
3. உதிரி-1.

Scanned with OKEN Scanner